ஆய்வு செய்து, தேவை ஏற்படின் முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா

***58088—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த 11–12–2021 அன்று சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில், சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து, சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தாலுகா, ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட இடத்தை Special Purpose Vehicle *நிர்வாகத்தினருக்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், விரிவான திட்ட அறிக்கை, பூங்காவின்* SPV*-யால் தயார் செய்யப்பட்டு வருகிறது. விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு, நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

2023 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கின்ற தங்கத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கின்ற மண்ணின் மைந்தர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய பாதம் தொட்டு வணங்கி, எனது உரையை துவக்குகிறேன். எனது கோரிக்கையை ஏற்று, ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வந்து, முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்ற அதேவேளையில், நலிவடைந்துவரும் ஜவுளித் தொழிலைக் காப்பாற்ற சில சலுகைகளை ஜவுளி உற்பத்தியாளர்களுக்குச் செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். வட இந்தியாவிலே, Cotton Corporation of India என்கின்ற அமைப்பின் மூலமாக விவசாயிகளிடம் பருத்தி கொள்முதல் செய்யப்பட்டு நியாயமான விலையிலே நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ஜவுளி உற்பத்தியாளர்கள் மலிவான விலையிலே, ஜவுளியை உற்பத்தி செய்து, சந்தைப்படுத்த வசதியாக இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை இங்கே அமல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

அதேபோல் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் நடைமுறையில் உள்ள, மின் இணைப்பின்மூலம் நாடா இல்லா தறிகள், shuttleless loom மூலம் தயாரிக்கப்படுகின்ற துணிகளுக்கு மீட்டர் ஒன்றிக்கு 6 ரூபாய்தான் செலவாகிறது. ஆனால், நமது தமிழ்நாட்டில் அதுபோன்ற தறிகளில் தயாரிக்கப்படுகின்ற துணிகளுக்கு மீட்டர் ஒன்றிற்கு 9 ரூபாய் செலவாகிறது. ஆகவே, அதைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,

சேலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார். அவரது நோக்கமே அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், நெசவாளர்களின் தொழிலை காப்பாற்றுவதும்தான். இந்தப் பூங்கா சேலம் மேற்கு மாவட்டம், ஓமலூர் மெயின் ரோடு பகுதியில் உள்ள ஜாகீர் அம்மாபாளையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவானது Scheme for Integrated Textile Parks (SITP) மற்றும் Integrated Processing Development Scheme (IPDS)-ன்கீழ் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த திட்ட மதிப்பீடு 360 கோடி ரூபாயாகும்; அமைக்கப்பட்டுள்ள கூடங்கள் 72. தற்போதைய நிலை; இந்தப் பூங்காவிற்கு சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமம், சர்வே எண் 9/1-ல் 119 ஏக்கர் நிலம் சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டது. இந்த இடத்தை 22-7-2022 அன்று நானும், அரசு முதன்மைச் செயலாளர் அவர்களும், துணி நூல் ஆணையர் அவர்களும், சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்களும் நேரில் சென்று ஆய்வு செய்தோம். மேற்படி இடத்தில் பூங்கா அமைத்திட அரசாணை எண் 223, Industries, Investment Promotion & Commerce (MMA) Department, dated 9-11-2022-ன்படி புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் (Geology and Mining Department) தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது. Tamil Nadu Pollution Control Board-ன் clearance-க்கு அனுப்பப்பட்டுள்ளது. பூங்காவின் special purpose vehicle மூலம் திட்ட அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன், பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பருத்தி பற்றி கேள்வி கேட்டார். இதற்கு முன்பு ஆந்திராவிலிருந்து நூலை இங்கு வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அவர்கள் cess வரி 1% நீக்க வேண்டுமென்று முதல் கோரிக்கையாக வைத்தார்கள். அந்த 1% வரியை நீக்கியவுடன், இன்றைக்கு transport charge குறைந்துவிட்டது. இப்போது, Cotton Corporation of India (CCI) நமது தமிழ்நாட்டில் வந்துவிட்டது. இப்போது யார் வேண்டுமானாலும் அந்த இடத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளலாம். அதேபோன்று கூலி rate பற்றி உறுப்பினர்

அவர்கள் கேட்டார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான், ஒரு முன்மாதிரியாக, இந்தத் துறைக்கு அதிகளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. Textiles*–க்கு என்று தனியாக ஓர் ஆணையத்தை ஆரம்பித்து, இதற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர்தான். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் ஜவுளித் துறை சம்பந்தப்பட்டதுதான். ஜவுளி உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படை ஆதாரமாக மின்சாரம் இருக்க வேண்டும். தற்போது மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே 500 யூனிட்டுகள் மின்சாரமும், மாண்புமிகு எடப்பாடியார் அண்ணன் அவர்கள் ஆட்சியிலே 750 யூனிட்டுகள் மின்சாரமும் விசைத் தறிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை, வரிசை எண் 156–ல் 750 ஆக இருந்த மின்சார யூனிட்டுகளை 1,000 யூனிட்டுகளாக உயர்த்தி வழங்குவதாகவும், வரிசை எண் 146–ல் 200 யூனிட்டுகள் கைத்தறிகளுக்கான இலவச மின்சாரத்தை 300 யூனிட்டுகளாக உயர்த்தி வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டது. அதை எப்போது வழங்க இருக்கிறீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிஜமாகவே இந்தக் கேள்வியைக் கேட்கும்போது நீங்கள் எல்லாம் சிந்தித்துக் கேட்கிறீர்களா என்பது தெரியவில்லை. இப்போதுதான் மாண்புமிகு அமைச்சர் திரு. சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து 20 மாதங்கள்தான் ஆகியுள்ளன. இன்னும் நான்கு வருடங்கள் இருக்கின்றன. அதாவது இன்னும் 40 மாதங்கள் உள்ளன. கண்டிப்பாக எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், சொன்னதை*

நிறைவேற்றுவார். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்கிற, கலைஞர்போல் ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் அவர்தான் இந்த முதலமைச்சர். நிச்சயமாகச் செய்வார், நடக்கும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

CEmONC மையம்

***13010—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் அரசு வட்ட மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையம் (CEmONC) துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், துறையூர் அரசு தாலுகா மருத்துவமனை 50 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 400 வெளிநோயாளிகளும், 25 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று பயன்பெற்று வருகிறார்கள். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 56 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வெளிநோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, அவசரகால ஊர்திகள் நிறுத்துமிடம் ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த மருத்துவமனையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 30 பிரசவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய நலத் திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, அறிவிப்பு எண் 65-ன்படி, Program Implementation Plan*-ன்கீழ் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் 21-12-2022 அன்று மாண்புமிகு நகராட்சி*